திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 19.04.2026

# தானமும்.. தர்மமும்..!

" தனக்கு மிஞ்சியதுதான் தானமும். தர்மமும்.." என்பதுதான் நமக்குத் தெரிந்த பழமொழி. ஆனால், நம் முன்னோர்கள் சொன்னதன் பொருள் அது அல்ல..

"தனக்கென்று மிஞ்சியது தானமும். தர்மமும்தான்.." என்பதே அதன் சரியான பொருள்.

எவ்வளவு அதிகமாக பணம் சம்பாதித்தாலும், எவ்வளவு அதிகமாக சொத்துக்களை வாங்கி குவித்தாலும், அது எதுவுமே நம்மோடு வரப்போவதில்லை. அதை நமக்கு பின்னால் யாரோ எடுத்துக்கொள்ளப் போகிறார்கள்.

ஆனால், தனக்கென்று மிஞ்சி தன்னோடு வரப்போவது எது? என்று பார்த்தால், அதுதான்.. நாம் வாழ்கின்ற காலங்களில் செய்கின்ற தானமும் தர்மமும். ஏனென்றால், இந்த அவசரமான உலகத்திலே நம்மைப் பற்றி நினைத்துப் பார்ப்பதற்கென்று ஆட்கள் இருக்கப் போவதில்லை. அவரவர் கால ஓட்டத்திற்கு ஏற்றார் போல ஓடிக்கொண்டே இருப்பார்கள். அப்படிப்பட்ட சூழலில், நாம் வாழ்கின்ற காலத்தில் நாம் செய்கின்ற தானமும்.. தர்மமும்தான்.. நம்முடைய இந்த மண்ணுலக வாழ்க்கைக்குப் பிறகும் நமக்கு உறுதுணையாக இருந்து நம்மை நல்ல நிலையை அடையச் செய்யும்.

தான.. தர்மங்கள்.. என்பது மிகவும் கடினமான ஒன்று அல்ல.

* இந்த மனிதப் பிறவியில் நம்மால் முடிந்தவரை, எந்தெந்த வழிகளில் எல்லாம் பிறருக்கு உதவியாக, உறுதுணையாக, பிறரின் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்க முடியுமோ. அதையெல்லாம் தேடித் தேடி செய்து கொள்வதுதான் மிகச் சிறந்த வழி.

* நம்மால் அதையெல்லாம் செய்ய முடியாது. நம்மிடம் பணம் இல்லை என்றெல்லாம் நினைத்து, நாம் ஒதுங்கி விடக்கூடாது.

* தானங்களிலே உயர்ந்ததாகப் பார்க்கப்படுவது அன்னதானம். அவர்கள் வசதி படைத்தவர்கள். அதனால் அன்னதானம் செய்கிறார்கள். நம்மிடம் பணம் இல்லையே.. நாம் எப்படி அன்னதானம் செய்வது என்று எண்ணி ஒதுங்கி நிற்கக்கூடாது.
அந்த அன்னதானம் நடைபெறும் இடத்திற்குச் சென்று, அங்கு உணவருந்தும் நபர்களுக்கு நீர் கொடுப்பது, உணவுகளைப் பரிமாறுவது என்று அந்த அன்னதானத்தில் தன்னால் இயன்ற சிறு சிறு பணிகளைச் செய்வது என்பதும் நமக்கு புண்ணியத்தைத் தருகின்ற ஒரு செயலாகும்.

* கோவிலுக்குச் செல்கிறோம். பிரகாரத்தைச் சுற்றி வருகிறோம். அங்கு தேவையில்லாத செடிகள், முட்கள் மற்றும் குப்பைகள் இருக்கிறது என்றால், அவற்றையெல்லாம் சுத்தம் செய்யும் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதும் ஒரு மிகச் சிறந்த தொண்டுதான்.

* கோவிலில் சிதறுகாய் உடைத்திருக்கிறார்கள். அது சிதறி வழியில் கிடப்பதை பார்த்தால், யாருடைய கால்களிலும் அது காயத்தை ஏற்படுத்தாமல் இருக்க அதை எடுத்து ஓரமாக போடுவதுமே ஒரு உன்னதமான செயல்தான்.

* கோவிலில் ஒட்டடை, தூசு படிந்திருந்தால் அதை சுத்தம் செய்யலாம். இது நம்முடைய கோவில் என்று நினைத்து நம்மால் முடிந்த சிறு சிறு பணிகளைச் செய்யலாம்.

* வழியில் ஒரு பசுவைக் கண்டால், தன்னால் இயன்றதைப் பசுவிற்குக் கொடுத்து அதன் பசியாற்றலாம்.

* கோவிலுக்கு வருபவர்களிடமும், நம்மைச் சந்திக்க வருபவர்களிடமும் அல்லது நாம் சந்திக்கும் நபர்களிடமும் அன்போடு பேசலாம். கடுகடுவென்று கோபத்தோடு கடுமையான சொற்களைப் பிரயோகிக்காமல் இருக்கலாம்.

* நம்மிடம் வந்து, “கஷ்டம்” என்று மன வருத்தத்துடன் சொல்பவர்களுக்கு, ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் பேசலாம். “கவலைப்படாதீர்கள் எல்லாம் சரியாகிவிடும். இதுவும் கடந்து போகும். நானும் உங்களுக்காக இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்து கொள்கிறேன்" என்று சில ஆறுதல் வார்த்தைகள் சொல்லும் பொழுது, அதுவே அவர்களுக்கு மிகப்பெரிய தெம்பாக இருக்கும். இதுவும் ஒரு வகையில் நல்ல சேவைதான்.

* எந்தெந்த விதத்தில் எல்லாம், நம்மால் நல்ல விஷயங்களைச் செய்ய முடியுமோ அதை எல்லாம் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும்.

* எங்காவது கோயில்களுக்கோ அல்லது ஆன்மிகச் சொற்பொழிவுகள் நடைபெறும் இடங்களுக்கோ சென்று, அமைதியாக அமர்ந்து அந்த நல்ல விஷயங்களைக் கேட்கும் பொழுது, நம்முடைய மனம் மேலும் பக்குவப்படும். அது நமக்கு மிகச்சிறந்த அனுபவங்களையும் பெற்றுத் தரும்.

* மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தருவது, ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு வாரத்திற்கு ஒரு நாள் சென்று நம்மால் முடிந்த சிறு சிறு பணிகளை அவர்களுக்குச் செய்து கொடுப்பது, சாலையைக் கடக்க சிரமப்படுபவர்களுக்கு உதவி செய்வது என்று எந்தெந்த விதத்தில் எல்லாம் நம்மால் நல்ல செயல்களைச் செய்ய முடியுமோ. அதை எல்லாம் தேடிச் சென்று செய்ய வேண்டும்.

* நம்மிடம் பணம் இல்லை. நம்மால் முடியாது என்றெல்லாம் எண்ணிக் கொண்டு ஒதுங்கி நிற்பது என்பது கூடாது. இல்லையென்றால், பணம் சம்பாதித்த பிறகு இதையெல்லாம் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டு நாம் விலகிக் கொள்வதும் கூடாது. பணம் வந்த பிறகு செய்வது என்பது வேறு. அது செய்து கொள்ளலாம். ஆனால், இப்பொழுது நம்மால் செய்யக்கூடிய செயலாக இருந்தால், உடனடியாக அதைச் செய்து கொள்வதும், அப்படி தன்னால் செய்ய முடியாத நிலையில் இருந்தால், பிறர் செய்யும் பொழுது அந்த நல்ல செயலில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதுதான் மிகவும் முக்கியம்.

* உலகத்திலேயே மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியது எதுவென்றால், அது மற்றவர்களை சந்தோஷப்படுத்துவதுதான். நாம் பிறருக்கு எந்த விதத்திலாவது உபயோகமாக இருப்பதும், அவர்களின் மன மகிழ்ச்சிக்குக் காரணமாக இருப்பதும் ஒரு வகையில் புண்ணியம்தான். ஏனென்றால் அதுதான் நம்முடன் வரக்கூடிய மிகப்பெரிய சொத்து.

அதைத்தான் நம் நம் முன்னோர்கள் மிக அழகாகச் சொன்னார்கள், "தனக்கென்று மிஞ்சியது தானமும்.. தர்மமும்தான்..” என்று.